454

போதனைவிஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

454 22 JUN 1943 MADRAS

S. 1941-43.

...A. Lourduswami, B.A., L.T.
...raining School, Trichinopoly.

JL
ஊ211, N11ↄↄ
N143.33.12
189987

...5 ஜுன் 1943 மலர் 12

...றைமுறை பாடசாலை, திருச்சினப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 1¼.

போதனா விஷய பூங்கொத்து

பொருளடக்கம் — பக்கம்

1. பத்திராதிபர் குறிப்புகள் 225
2. சென்னை கல்வி இலாகா 226
3. T. S. L. C. Examination Results, March, 1943 227
4. அணியியல் 230
5. சிவிக்ஸ் போதனைக்கான நடைமுறைக் குறிப்புகள் ... 231
6. யோசனைக் கணக்கு 232
7. விடுகவிகள் 232
8. பாடக் குறிப்பு 233
9. "பள்ளித் திண்ணையில்" 234
10. சிறு கதை 237
11. பெண்ணின் விவேகம் 239
12. யோசனைக்கணக்கு விடை 241
13. பெற்றோர் சங்கங்கள் 242
14. விடுகவி விடை 244
15. கீர்த்தனை 245

Rates of Advertisement

PERIOD	HALF PAGE Rs.	As.	Ps.	FULL PAGE Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

போதனை விஷயப் பூங்கொத்து

கோத்து 33] 15 ஜூன் 1943 [மலர் 12

பத்திராதிபர் குறிப்புகள்

T. S. L. C.—பரீட்சை 1943.—சென்ற மார்ச்சு-மீ நடைபெற்ற T. S. L. C. பரீட்சையில், நமது பாடசாலை ஸெக்கண்டரி கிரேடு மாணவர்களும், எலிமெண்டரி ஹையர்கிரேடு மாணவர்களும் வழக்கம்போல் வெகு திறமையுடன் தேறியுள்ளார்கள். விவரம் மற்றோரிடத்திற் காண்க. ஸெக்கண்டரி கிரேடில் 86%-ம், எலிமெண்டரி கிரேடில் 93%-ம் பாஸ் செய்திருப்பது மிக்க மகிழ்ச்சிக்குரியதென்பது விளக்கம். இம்மாகாணத்தில் ஸெக்கண்டரி கிரேடு மாணவர்கள் அடைந்த முதன்மை மார்க்கு 58% ஆக இருக்கும்போது, நமது ஸெக்கண்டரி கிரேடு மாணவர் 56% பெற்றதானது போற்றத்தக்கதாகுமன்றோ! ஆனதுபற்றி தேறியுள்ள மாணவரனைவர்க்கும் எமது மனமார்ந்த சந்தோஷத்தையும் வாழ்த்துதலையும் கூறுகின்றோம்.

ஷை பரீட்சையில் முதன்மையாகத் தேறியுள்ள ஸெக்கண்டரி கிரேடு மாணவர் Mr. T. Alangaram, (56%) ; எலிமெண்டரி கிரேடு மாணவர்கள் Mr. V. R. Pragasam (56%), Mr. M. Santhiagu (56%) ஆகிய இவர்களுக்கும், ஷை பரீட்சையில் இரண்டாவதாகத் தேறியுள்ள, ஸெக்கண்டரி கிரேடு மாணவர் Mr. T. C. Subbiah (54%) ; எலிமெண்டரி ஹையர் கிரேடு மாணவர்கள், Mr. A. Savarimuthu (50%), Mr. V. Rayappan (50%) ஆகிய இவர்களுக்கும், எமது மனமுவந்த சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், நம் பாடசாலைத்தினக் கொண்டாட்டத்தன்று இவர்கள் ஒவ்வொருவருக்கும் வழக்கம்போல் பதக்கப் பரிசுகள் அளிக்கப்படும் என்பதையும் அறிவிக்கின்றோம்.

சென்னை கல்வி இலாகா

Proceedings of the Director of Public Instruction, Madras.—Dis. No. 1136/43. dated 11-2-'43

ஷை உத்திரவின்படி, ஒரே மானேஜ்மெண்டுக்கு உட்பட்ட ஒரு எயிடெட் பாடசாலையிலிருந்து மற்றொரு பாடசாலைக்கு மாற்றப்படும் ஆசிரியருக்கு, பிரயாணகாலத்துக்கு (Transit period) கிராண்டு உண்டு. ஆனால் மாற்றிப்போகும் பள்ளிக்கூடம் 5 மைலுக்கு உட்பட்டிருந்தால், பிரயாணம் காலம் (Joining time) கிடையாது. உடனே போய் வேலை ஒப்புக்கொள்ளவேண்டியதே.

7 நாட்களுக்குமேல் எந்தக் காரணமானாலும் பிரயாண காலம் (Joining time) அனுமதியில்லை. அதாவது இந்த 7 நாள் அவகாசத்துக்குத்தான் கிராண்டு அஸெஸ் செய்யப்படும்.

ஒரு காலண்டர் வருடத்தில் ஒரே ஆசிரியருக்குத்தான் மேற்கூறியபடி, பாடசாலை மாறுதல் விஷயம் அனுமதி அளிக்கப்படும்.

மாறிப்போகும் பள்ளிக்கூடம் அங்கீகரிக்கப்பட்டோ, அல்லது அங்கீகரிக்க லாயக்குள்ளதாகக் கருதப்பட்டாலன்றி மாறிப்போகும் ஆசிரியருக்கு, Transit period-க்கு கிராண்டு கிடைக்கமாட்டாது.

யானையைப்பற்றிய பழமொழிகள்

189987

R. Muthukrishna Naidu

1. யானைக்கொருகாலம் பூனைக்கொருகாலம்.
2. யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்.
3. யானை அசைந்து தின்னும் வீடு அசையாமல் தின்னும்.
4. யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே.
5. யானைமேல் அம்பாரிவைத்தாற்போல்.
6. யானை நடையும் பெருச்சாளி ஓட்டமும்.
7. யானை பலம் ஆயிரம் சட்டு.
8. யானைமேல் போகிறவனை சுண்ணாம்பு கேட்பதுபோல்.
9. யானைக்கும் அடி சறுக்கும்.
10. யானை வாயிற்போன கரும்புபோல.
11. மதம்பிடித்த யானைபோல.

R. C. Boarding and Training Institution, Trichinopoly

RESULTS

Training School Leaving Certificate Examination, March 1943

Secondary Grade - (Revised Scheme)

No.	Candidates Passed : Name	Percentage of Marks
9594	C. Venkatachalam	46
9595	M. David Raja	46
9596	R. Sundaram	45
9598	T. C. Subbiah	54—II
9599	M. Antony	47
9600	S. Marian Corera	52
9601	A. Antonimuthu	47
9602	T. Alangaram	56—I
9603	M. Dominic Fernando	46
9605	Br. S. Arulraj	45
9606	Br. A. Lourdusamy	47
9607	S. Gopalakrishnan	51
9608	G. Belevendram	51
9609	M. Manikkam	52
9610	M. Belevendram	50
9611	P. Maria Louis	41
9612	T. Savarirajan	46
9613	I. Antony	48
9614	R. Kolandaisamy	42
9615	S. Balasubramanian	43
9616	M. Antonisamy	45
9618	S. Lagumiah	49
9620	S. Gnanamony	40
9621	S. Rajagopalan	44
9622	S. Ganesan	49
9623	D. Maria Joseph	45

Secondary Grade (Old Scheme)

6104	N. Krishnaswamy	38
6105	Ambrose A. Ranjitraj	34

No.	Candidates failed : Name	Group of subjects in wich failed
9593	R. Balasubramanian	A
9597	S. Moses	B
9604	M. Thatha pillai	B D
9617	Y. Maria Antony	A
9619	S. Chelliah	B
9624	N. Pranatharthiharan	B

Note :—A. Education I & II ; B. English methods and Texts : D. Tamil—Text and methods.

22 JUN 1943
MADRAS

Elementary Grade — Revised Scheme

No.	Candidates Passed: Name	Percentage of Marks
13362	K. Antonisamy	43
13363	A. Savarimuthu	50—II
13364	D. Kolandaisamy	36
13365	S. Hirudayasamy	47
13366	S. Abraham	46
13367	I. Antony	47
13368	A. Adaikalasamy	41
13369	S. Rajendram	44
13370	P. S. Madalaimuthu	39
13371	M. Santhiagu	56—I
13372	A. Arulanandam	48
13373	K. Maruthamuthu—Joseph	42
13375	K. A. Arulappan	33
13376	S. Arockiam	45
13377	A. Antonisamy	44
13378	S. Duraisamy	42
13379	K. Thangasamy	41
13380	V. R. Pragasam	56—I
13381	K. Royappan	48
13383	V. Kolandaisamy	42
13384	P. S. Arokiasamy	39
13385	T. Antony	47
13386	D. Arokiasamy	43
13387	P. S. Arokiasamy	34
13388	P. Mariadass	42
13389	A. Anthonimuthu	39
13390	M. Doraisamy	40
13391	M. M. Nallamayan alias Ignatius	32
13392	V. Arulappan	49
13393	G. Ramasamy	39
13394	A. Devanesan	46
13395	V. Manuel	43
13397	A. Arokiam	38
13398	K. S. Antoniswamy	45
13399	M. Arokiam	36
13400	A. Susaimanikkam	49
13401	P. Anthonimuthu	41
13402	A. Arokiam	35
13403	M. Singarayan	48
13404	K. Singarayan	43
13405	U. Arokiam	44
13406	A. Ignacimuthu	41
13407	Maria Irudaya Viagappan	34
13408	P. Susairethinam	39
13409	V. Rayappan	50—II

No.	Candidates Passed : Name	Percentage of Marks
13410	I. Gnanapragasam	43
13411	S. Joseph	45
13412	B. Lourdusamy	36
13413	M. Malayappan	47
13414	A. Asirvatham	42
13415	A. Antony	36
13416	K. I. Susaimanikkam	38
13417	P. Maria Joseph	37
13418	M. Savarimuthu	49
13421	G. S. Maria Adaikalam	42
13422	S. Maria Arul	43
13423	G. Arokiasamy	34
13424	G. Susaimanikkam	39
13425	K. C. Arokiam	35
13426	V. Ambrose	34
13428	M. Antonisamy	33
13429	S. R. Rajagopalan	37
13430	R. Adaikalasamy	39
13431	N. S. Renganathan	41
13432	R. Gnanamuthu	44
13433	R. Siluvaimuthu	41
13434	S. Savariar	37
13435	S. A. Muthusamy	41
13436	A. S. Ignatius	45
13437	A. Rayer	45
13438	P. Natarajan	43
13439	K. V. Palanisamy	48
13440	R. Josephrethinam	34
13441	V. K. Mahadevan	34
13442	K. A. Susai	35
13443	A. S. Sebastian	36
13444	A. Antony	44
13446	D. Dharmarayar	37
13447	S. Pitchai	38
13448	A. Chinnappan	37
13987	C. Gnanapragasam	35
13841	S. Stanislaus	43
13731	K. Mariaselvam	54
13733	M. Rajendram	42

குறிப்பு :—எலிமெண்டரி கிரேடில் ஷை பரீட்சையில் தேருதவர்கள், எந்தெந்தப் பாடங்களில் தேறவில்லை என்பன போன்ற விவரங்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

அணியியல்

"பின்வருநிலையணி"

M. A. S. Udaiyar, T. P.

ஒரு செய்யுளின் முதலிலே வரும் சொல்லேனும், பொருளேனும் சொல்லும் பொருளுமேனும் அச்செய்யுளுட் பல விடங்களிலே வருமாறு செய்யுள் அமைத்தலே பின்வருநிலையணி என்னும் அலங்காரமாகும். அது, சொற்பின்வருநிலையணி, பொருட்பின்வருநிலையணி, சொற்பொருட்பின் வருநிலையணி என மூவகைப்படும்.

1. சொற்பின்வரு நிலையணி:—அஃதாவது செய்யுட்டலைப்பில் எடுத்தாளப்பட்ட சொல் பின்னர்ப் பலவிடங்களில் அச்செய்யுளுள்ளேயே வருதலாகும்.

உதாரணம்:—"வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார் வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர் வைகலும் வைகத்தம் வாழ்நாண்மேல் வைகலை வைகலும் வைத்துணராதார்" இச்செய்யுளுள் "வைகல்" என்ற ஒரு சொல் பல பொருளில் பல இடங்களிற் பயின்றுவருதல் காண்க. இதன் பொருள்:—வைகலும்=ஒவ்வொரு நாளும், வைகல்=பொழுதுபுலர்த்தல், வரக்கண்டும்=வருதலைப் பார்த்திருந்தும், வைகலை=பொழுது கழிதலை, தம்வாநாண்மேல்= தமது ஆயுநாளில், வைகுதல் வைத்து=தங்கவைத்து, உணராதார்= அறியாதவர், வைகலும்=எந்நாளும், வைகலை=நாள்தோற்றத்தை, வைகும் என்று=நிலைத்திருக்கும் என்று, இன்புறுவர்=சந்தோஷிப்பர் என்பதாகும்.

பொருட்பின்வருநிலையணி:—அஃதாவது ஒரே அர்த்தத்தைத் தரும் பல சொற்களை அமைப்பதாகும்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங்கொள்ளார்
கருமமே கண்ணாயினார்" இச்செய்யுளில், பொருட்படுத்தார் என்ற பொருளில் பல வார்த்தைகள் வந்துள.

சொற்பொருட்பின் வருநிலையணி, சொல்லும் பொருளும் ஒன்றாய் வருதலாம். உதாரணம்:

"சொல்லுக சொல்லைப் பிறிதோருசொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து" இதிற் சொல்லும் பொருளும் ஒன்றிவந்துள்ளமைகாண்க.

சிவிக்ஸ் போதனைக்கான நடைமுறைக் குறிப்புகள்

(P. G. S. Aiyar B.A., L.T.)

சிவிக்ஸ் போதனையின் நோக்கங்கள் சென்ற இதழில் விவாதிக்கப்பட்டது. தாங்கள் கற்றுக்கொள்ளும் பாட விஷயங்களைத் தினசரி வாழ்க்கையில் சிறுவர் பின்பற்றினால்தான் இப்பாட போதனையினால் பயன் ஏற்பட்டுள்ளதென்பது வெளிப்படையாகும். சிறுவர் சுத்தம், சுகாதாரம் ஒழுங்கு முதலியவற்றைக் கைக்கொள்ளும்படி செய்வதுதான் இப்பாடத்தின் முதன்மையான நோக்கமாகும். ஆரம்பப் பருவத்தில் மாணவர்களைத் தக்க வழியில் பழக்கவேண்டும். ஏட்டுப் படிப்புமாத்திரம் போதாது. ஆசிரியரும் மாணவருக்கு வழிகாட்டியாக விளங்கவேண்டும். அவர் தமது சுயசமூக அரசியல் கடமைகளைச் சரிவர நிறைவேற்றவேண்டும். முக்கியமாக, தாம் பள்ளிக்குச் சுத்தமாகவும், சரியான காலத்திலும் வந்து பாடங்களை ஒழுங்காக நடத்தினால் அத்தகைய செயலே மாணவர் மனதைக் கவர்ந்து நல்ல குணங்களை ஏற்படுத்தும். ஆசிரியர் தாம் செய்யும் வேலை யாவற்றையும் வரிசைக்கிரமமாக நேரத்தை வீணாக்காமல் செய்துமுடித்தல் அவசியம். வகுப்பு முடிந்ததும் கரும்பலகையை நன்கு சுத்தம் செய்துவிட்டுத்தான் வகுப்பைவிட்டு நீங்கவேண்டும். இம்மாதிரி சிறு விஷயங்களில், சிறிதளவு சிரத்தையெடுத்துக்கொள்வோமானால், நாம் மாணவர் பழக்க வழக்கங்களைச் சீர்படுத்துவதற்கு பெரிதும் முயன்றவர்களாவோம்.

ஆசிரியரின் நடத்தை சிறந்ததாயிருந்தால்மாத்திரம் போதாது. அவர் சிறுவர்களைப் பழக்குவதும் அவசியம். வகுப்பிற்கு சிறுவர்கள் சுத்தமாக வருகிறார்களாவென்பதைக் கவனிக்கவேண்டும். பள்ளி துவக்கும்பொழுது கவனிக்கவேண்டிய முதல் அலுவல் இதுவேயாகும். காலந்தவறி வருதலைப் போக்கவேண்டும். வகுப்பறையில் குப்பைகூளங்களைப் போட அனுமதிக்கக்கூடாது; அதற்கென பிரத்யேகமாகக் கூடைகள் (waste paper baskets) வைத்திருத்தல் அவசியம். பெஞ்சு, டெஸ்க் முதலியவைகளை அங்குமிங்கும் இழுப்பதையும் அனுமதிக்கக்கூடாது, மேலும் வகுப்பறையைச் சுத்தம் செய்வதில் சிறுவரின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டும். அறையைப் பெருக்குதல், கழுவுதல் முதலிய காரியங்களை மாணவர்களையே செய்யச் சொல்லலாம். விளையாடுமிடத்தையும் சுத்தமாக வைத்திருக்க ஏற்பாடு செய்யலாம். பள்ளியையும், அதன் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்திருப்பின் அதுவே மாணவரின் மனதைக் கவர்ந்து, அசுத்தப் பழக்கங்களினின்றும் தடுக்கும் சிறந்த உபாயமாகும்.

ஒழுக்கத்தையனுசரிக்கச் செய்வதற்கும் நாம் எளிதில் முயற்சியெடுத்துக்கொள்ளலாம். வகுப்பறையில் ஒன்றுகூடுவதும் நீங்குவதும் ஒழுங்குடன் நடைபெறவேண்டும். "க்யூ" முறையை (அதா

வது எறும்புகள் ஒன்றன்பின் ஒன்ருகச் சாரிசாரியாகப் போதல் என்ற எறும்புச்சாரி முறை) பின்பற்றுவது சிலாக்யம். ஒரு வகுப்பிலிருந்து மற்ருெரு வகுப்பிற்கு அல்லது தோட்டம், விளையாடுமிடத்திற்குச் செல்லும்பொழுது வரிசைக்கிரமத்தையனுசரிப்பது அவசியம். விளையாட்டுகளைச் சரிவர நடத்தினுல் அதுவுமொரு சிறந்த பயிற்சியாகும். தலைவனை (Captain) ஏற்படுத்தி அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி பழக்கவேண்டும். ரஸ்தா விதிகளை அனுசரிப்பதற்கும் பழக்க வேண்டும். பள்ளிக்கு வருவதற்கு ஒரு வழி (way in) போவதற்கு வேறு வழியென ஏற்பாடு செய்யலாம். வருகிறவர்கள் ஒரு சாரியாகவும், போகிறவர் வேருெரு சாரியாகவும் நடப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

மேற்கூறியவை யாவும் ஆரம்பப் பாடசாலையில் பின்பற்றக்கூடிய சில உபாயங்களேயாகும். இவைகளின் மூலம் சிவிக்ஸ் போதனையின் நோக்கங்களில் சில சித்திபெறும். ஆசிரியர்கள் யோசனை செய்யின் இவைபோன்ற இன்னும் அநேக உபாயங்களைச் சிந்தித்துக் கையாளலாம். இதன்மூலம் "ஸிவிக்ஸ்" என்பதின் அடிப்படையான தத்துவங்களை உணரச்செய்ய ஏதுவாகும்.

யோசனைக் கணக்கு

(K. Srinivasan)

ஒரு கூடையில் சில ஆரஞ்சுப்பழங்களும் அதைப்போல் மூன்று மடங்கு கொய்யாப்பழங்களும் சேர்ந்து 40 பழங்கள் இருக்கின்றன. ஆனுல் ஆரஞ்சுப்பழங்களிலிருந்து 5 பழங்களும், கொய்யாப்பழங்களிலிருந்து 5 பழங்களும் எடுத்துவிட்டால் இப்போது கொய்யாப்பழத்தின் எண்ணிக்கை ஆரஞ்சுப்பழத்தின் எண்ணிக்கையைப்போல் 5 மடங்காகும் என்ருல் அந்தக் கூடையிலுள்ள ஆரஞ்சுப்பழங்கள் எத்தனை? கொய்யாப்பழங்கள் எத்தனை?

(விடுகவிகள்)

1. ஆகாயம்தனில் பறக்கும் கருடனல்ல; அதிக வால் நீண்டிருக்கும் அனுமாரல்ல; சீறியே ஓலமிடும் சிங்கமல்ல, சிறுவருக்கு இக்கதையைச் செப்புவீரே. V. Pichaimuthu, Teacher.

2. அன்புள்ள ஆரோக்கியசாமி பிள்ளை தன் இரு கரங்களினுல் ஈரெடுத்து உங்கள் தகப்பனுர் ஊருக்குப்போக, எங்கள் தகப்பனுர் ஏழையாக நாங்கள் ஐவரும் ஒவ்வொருவராய் அவ்வூருக்கப்பால் அக்கரை சேர்ந்தோம். (S. Chinnappan & C. Arputhasamy VI. Stand. M. S.)

பாடக் குறிப்பு

பாடம் : தமிழ். வகுப்பு : V. நோக்கம் : விவேக சிந்தாமணிச் செய்யுள் ஒன்றினைக்கூறி, அதன் கருத்து, சொல், பொருள் நயங்களைக் கண்டறியச் செய்தல்.

பீடிகை : தாமரைத் தடாகத்தில் தவளைகள் வசித்து வந்தாலும், தாமரைப் பூவின் மதுவைச் சுவைத்தனுபவிக்கும் ஆற்றல் இல்லை; ஆனால் தடாகத்திற்குப் புறம்பேயுள்ள வண்டுகள் (தேனீக்கள்) அதனை யனுபவிக்கின்றன என்ற உவமையோடு பொருந்திய ஒரு செய்யுளைக் கற்போம் எனக் கேள்விகள்மூலம் சம்பாஷித்து நோக்கத்தை வெளிப் படுத்துக.

விஷயம். செய்யுள் :

தண்டாமரையினுடன் பிறந்துந் தண்டேனுகரா மண்டேகம்
வண்டோ கானத்திடையிருந்து வந்தே கமல மதுவுண்ணும்
பண்டே பழகி இருந்தாலும் அறியார் புல்லோர் நல்லாரே
கண்டேகளித்தங்குறவாடித் தம்மிற் கலப்பர் கற்றோரே.

கடின பதப் பிரிவு : தண் + தாமரை ; தண் + தேன் + நுகரா ; கானத்து + இடை ; கமலம் + மது + உண்ணும். கண்டு + களித்து + அங்கு + உறவாடி + தம்மில். கடினபதப் பொருள். தண் = குளிர்ச்சி பொருந்திய ; நுகரா = சுவைப்பதில்லை. மண்டேகம் தவளை. மது = தேன் ; பண்டு = நீண்டகாலம் ; புல்லோர் = அற்பர் ; புல்லோர் × நல்லோர். கானம் = காடு, பாட்டு ; கமலம் = தாமரை ; உறவு = தொடர்பு ; கலப்பர் = சேர்வர் ;

முறை : செய்யுளைக் க. ப. வில் எழுதி, தெளிவாய்ப் பாடிக் காட்டவும். தொடர்மொழிகளைத் தனிமொழியாகப் பிரித்துப் பிரித்தே பாடிக்காட்டவேண்டும். எழுதியும் காட்டுக. கடின மொழி களின் அர்த்தத்தைக் கூறி உதாரணங்களில் அமைத்து விளக்கவும். உபமானமும் உபமேயமும் எவ்வாறு பொருந்தியிருக்கிறதென்பதைக் கேள்விகள்மூலம் விளக்கவேண்டும். பொருள்நயம் சொல்நயம் இதில் அடங்கியிருப்பதைச் சுட்டிக்காட்டவும்.

விஷயம் : செய்யுளின் பொருள்—கருத்து : அற்பர்—நல்லோரு டன் வெகுகாலம் பழகினும், நல்லோருடைய மேன்மைகளை உணரார். நற்குணமுள்ளவர்கள், நல்லோருடைய தொடர்பிலே இன்பங்கண்டு மகிழ்வர். ஆகவே நாம் நல்லோருடன் பழகிப் பயனடைதல் வேண்டும்.

அப்பியாசம் : புல்லோருடைய குணம் எத்தகையது ? இதை இப்பாட்டில் எவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. மண்டேகம், வண்டு. இவற்றைப்பற்றி—பாட்டில் நீ அறிந்தது யாது ? மண்டேகம் = அற்பர் ; வண்டு = நல்லோர் எப்படி ஒற்றுமைப்படுத்தப்பட்டிருக்கிறது ? தண் என்ற பதத்தைவைத்து சில தொடர்மொழிகள் கூறுக. இச் செய் யுளின் கருத்தைப்பற்றி உன் சிநேகிதனுக்குக் கூறவும். இவை போன்ற இன்னும் பல அப்பியாசங்கள் கொடுத்தல் அவசியம்.

"பள்ளித் திண்ணையில்"

(கொத்து 33, மலர் 10—11, பக்கம் 213-ன் தொடர்ச்சி)

(N. R. திருவேங்கடம் L. F. H. E. School, Megalathur)

3. முதியோர் கல்வி வேண்டப்படுவதேன்?

ராஜு:—வாத்தியார் சார்! வந்தனம்! ஏது இன்றைக்கு ஆழ்ந்த படிப்பு? கையிலிருக்கும் புத்தகமும் புது தினுசா இருக்கே! என்ன கதைப் புத்தகமோ?

ஆசிரியர்:—வாரும் முத்துராஜா! தக்க சமயத்தில்தான் வந்திருக்கிறீர்கள்! நம்முடைய கதையே பெரிய கதையாய் இருக்கும்போது நமக்கு வேறு கதைப் புத்தகங்கூட வேண்டுமா?

நாயக்கர்:—வாத்தியார் சார்! நம்முடைய கதை என்கிறீர்கள்! அதைக் கேவலமாகவும் மதிக்கிறீர்கள்! நம்முடைய கதை என்றால் ஒன்றும் விளங்கவில்லையே!

ஆசி.:—விளங்கவில்லையா! கையிலே கருப்பு மசியைத் தடவி வெள்ளைக் காகிதத்திலே ரேகை புரட்டும் வரையிலும் உங்களுக்கெல்லாம் எதுதான் விளங்கப்போகிறது?

கோனார்:—நாயக்கரே! இன்னிக்கி வாத்தியார் என்னமோ கடுபிடியாய் இருக்கிறார். ஜாக்கிரதையாகப் பேசுங்கள். நம்ம சார் எதையோ ஒன்றை வைத்துக்கொண்டுதான் எப்பொழுதும் பேசுவார்.

ராஜு:—அடேயப்பா! வாத்தியார் சரியான இடத்தில் 'ஸ்க்ரூ' போடுகிறார். நீங்க ஆரம்பிக்கப்போகும் கதை இப்போ புரிஞ்சுது. ஏன் சார்? கிராம மக்கள் தற்குறிகளாய் இருப்பதைப்பற்றித்தானே.

ஆசி.:—முத்துராஜா! ஆம்! இன்றைய 'டாபிக்' அதுதான். இந்தப் புத்தகமும் அதைப்பற்றியதுதான். உலகிலுள்ள மற்ற நாடுகளைப்பார்க்க எனக்குக் கோபம் ரௌத்திராகாரமாக வருகிறது.

நாயக்.:—சார்! அது கிடக்கட்டும். அந்தப் புத்தகத்தில் என்ன விஷயங்கள் இருக்கின்றன? அதைக் கொஞ்சம் சொல்லுங்கள்!

ஆசி.:—கேளுங்கள்! சொல்லுகிறேன். மேனாடுகளிலே 100-க்கு 97 பேர் எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள். நாமோ 100-க்கு 97 பேர் எழுதப்படிக்கத்தெரியாத கீறல்புள்ளிகள்! வித்தியாசம் இப்பொழுது புரிகிறதா? அங்கெல்லாம் மாணவ மாணவிகள் மாத்திரமின்றி உங்களைப்போன்ற முதியோர்களும் கல்வியைப் பயில்கிறார்கள்!

கோனார்:—இது என்ன அதிசயம்! எங்களைப்போன்றவர்கள் கூடப் படிக்கிறார்களா? வாத்தியாரய்யா! இது எப்படி முடியும்!

ஆசி.:—ஏன்! முடியாமல் என்ன! முயன்றால் முடியாததும் உளதோ? மேல்நாடுகளில் கல்வியின் மதிப்பை சகலரும் நன்கு அறிந்து அதைப் பெறுவதற்காகப் பலவகைகளிலும் முயற்சி செய்கிறார்கள்! கல்வி அறிவையும் பெற்றுக் கடைசியில் சிறந்த அறிஞர்களாகிறார்கள்!

ராஜு :—அங்கெல்லாம் கிழமெல்லாம் படித்து என்ன சாதித்து விட்டார்கள்? நாங்கள் என்ன சார் சாதிக்காமல் போனது?

ஆசி :—அவர்கள் ஒன்றும் சாதிக்கத் தேவையில்லை. தங்கள் அளவில் பிறர் உதவியின்றி எழுதவும் படிக்கவும் தெரிந்துகொண் டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் உங்களைப்போல பெரு விரலுக்கு மை தேடுவதில்லை. மேலும் அதைக்கொண்டே ஒவ்வொருவர் பிர யாசைக்கேற்ற அளவிலும் முன்னேற இடமிருக்கிறது!

நாயக் :—சார்! அவர்கள் நிலைமை வேறு! நம்முடைய நிலைமை வேறு! நம் நாடுகளில் பிள்ளைகளே சரிவர பள்ளிக்குவர முடியா திருக்க எம்போன்றவர்களும் படிக்க வேண்டுமென்றால் ஆகக்கூடிய காரியமா? நாங்கள் எல்லாம் சம்சாரிகளல்லவா?

ஆசி :—நாயக்கரே! நீங்கள் எல்லாம் சம்சாரிகள்தான். உங்க ளுக்கிருக்கும் தொல்லைகளும் எனக்குத் தெரியும். ஆனாலும் நீங் களும் எளிதில் படித்து முன்னுக்குவர அநேக மார்க்கங்கள் உள்ளன!

கோனார் :—வாத்தியாரய்யா! எங்கோ அதைச் சொல்லுங்கள்! எங்களால் முடிந்தவரையில் நாங்களும் முயற்சிக்கிறோம்.

ஆசி :—நீங்கள் பிள்ளைகளைப்போல பள்ளிக்கூடத்திற்கு வர வேண்டியதில்லை. பள்ளிகூடத்திற்கு வராமலே படிக்கலாம். இது உங்களால் முடியாதா?

ராஜு :—பள்ளிக்கூடம் வராமல் படிப்பதா? வேடிக்கைத்தான்!

ஆசி :—நீங்கள் எல்லாம் சம்சாரிகள். பகலெல்லாம் உங்களுக்கு பல ஜோலியிருக்கும். இன்னும் கொஞ்ச நாழிகழித்து இரவு சாப் பிட்டானதும் வீண் அரட்டை அடிக்காமல் இப்படி வந்து கூடுங்கள். நானும் எனது உதவி ஆசிரியர்களும் வருகிறோம். தினசரி 1 மணி நேரம் உங்களுக்குச் சொல்லிக்கொடுக்கிறோம்.

ராஜு :—இப்படி 1 மணி படித்து கல்வியறிவு வந்துவிடுமா? என்ன சார்! இது என்ன 'மந்திரத்தில் மாங்காயா?

ஆசி :—மந்திரமில்லை! எல்லாம் தந்திரம்தான்! இந்த 1 மணி நேர காலத்தில் எழுத்தை வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டு முதியோர் கல்விக்கென்று மாஜி மந்திரி ராஜாஜி போன்றவர்கள் எழுதியுள்ள புத்தகங்களை வாங்கி வாசிக்கவேண்டும். பிறகு தினசரி சாயங்காலத்தில் கல்வியைப்பற்றி என்போன்றவர்களிடம் உரையாடு வதால் அறிவு வளரும்! மற்றும் பத்திரிகைகளைப் படிக்கச்சொல்லி கேட்கவேண்டும். பிறகு நீங்களே பத்திரிகைகளை 'பூதம்' என்று நினைக்காமல் சிறுகச்சிறுக படிக்கப் பழகவேண்டும். இதுமாத்திர மில்லை. இன்னும் கல்வி சம்பந்தமான கழகங்கள், கூட்டங்கள், பிரசங்கங்கள் முதலியன நடக்கும் இடங்களுக்கும் செல்லவேண்டும்.

கோனார் :—வாத்தியார் சார்! இதுக்கெல்லாம் எங்களுக்கு நேரம் ஏதுங்க?

189987

ஆசி. :—நேரமில்லாமல் என்ன? எவ்வளவோ நேரங்களை வம்பளப்பு, சொக்கட்டான், சூது இவைகளில் கழிப்பதை நான் அறிவேன். அதில் காட்டும் உற்சாகமும் சிரத்தையும் இதில் காட்டினால் நீங்களெல்லாம் கலா பொக்கிஷமாகிவிடலாமே? நான் சொன்ன வழிகளில் கொஞ்சம் தலைகொடுத்தால் பிறகு எல்லாம் சரியாய்விடும். எழுதப் படிக்க எளிதில் அறியலாம். உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் விஷயங்களை அறியலாம். நீங்கள் ஓய்வு நேரங்களில் வீணாக காலங்கழிக்காது உங்கள் மனதுக்கேற்ற புத்தகங்களைப் படித்து அறிவை விருத்தி செய்யலாம். உங்கள் கணக்கு வழக்குகளை நீங்களே குறித்து வைக்கலாம். அரசியல் விஷயங்களை அறிவதன்மூலம் உங்கள் வாக்குரிமை, அதன் மதிப்பு, அதை வினியோகித்தல் முதலியவற்றையும் அரசாங்கத்தில் உங்களுக்குள்ள பங்கையும் நீங்கள் அறிந்து அரசாங்கத்தில் உங்கள் குறைகளைத் திருத்தவோ, அரசாங்க சேவையைப் புகழவோ செய்யலாம். சுருங்கக்கூறின் நீங்கள் மக்களாக வாழலாம். இதனால் நாட்டுக்கும் பெருமை; உங்களுக்கும் பெருமை! நீங்கள் படித்திருந்தால் உங்கள் குழந்தைகளையும் கல்வியில் மேன்மேலும் ஊக்கலாம்! இவ்வளவு முன்னேற்றமும் ஏற்பட்டபின் நம் கிராமங்கள் எப்படியிருக்கும் என்பதை கொஞ்சம் யோசியுங்கள்.

நாயக். :—வாத்தியார் சார்! இதன் மகிமைகளையெல்லாம் அறியாமல் நாங்கள் சோம்பிக் காலங்கழித்தோம். இனி அவ்விதமே உங்களுடன் ஒத்துழைப்போம்!

கோனார் :—வாத்தியாரய்யா! இன்னிக்கே எங்க தெருவு ஆளுகளை இட்டுகிட்டு வர்ரேன். படிப்பை தொவக்குவோம்.

ஆசி. :—நல்லது! முடிந்தவரையில் எல்லோரையும் அழைத்து வாருங்கள். நானும் வருகிறேன். இப்படி ஒரு 6 மாதம் என்னிடம் வாருங்கள். உங்களைப் பிடித்திருக்கும் தற்குறிப் பேய் தானாக கடையைக் கட்டிவிடும்.

ராஜூ :—வாத்தியார் சார்! இப்படி நீங்க ஒரு பேயோட்டும் பூசாரி என்று எங்களுக்கு தெரியாது. இனி ஒவ்வொரு ராத்திரியும் இங்கே ஏக அமக்களந்தான்! இம், சார்! நாழியாகிறது. எல்லோரும் சென்று வருகிறோம்.

செட்டியார் :—இப்போது என்னிடத்தில் வேலை ஒன்றும் இல்லை தொந்திரவு செய்யாதே! போ.

வேலைக்குவந்த ஆள் :—காலைவிடமாட்டேன், "காரியமாகிறவரையில் கழுதையானாலும் காலைப்பிடி" என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

R. Subbaraman, Kariyananpatti.

சிறு கதை

'நெற்றிக்கண்ணைத் திறக்கினும் குற்றம் குற்றமே'

(உ. அமலதாசன், ஆசிரியன், திருக்குடும்பஸ்தாபனம்)

பிள்ளைகளே! நாம் சூட்டியிருக்கும் மகுடத்தை இதற்குமுன் நீங்கள் கேட்டிருப்பீர்கள். நம் செவிக்கினிய மொழியாம் தமிழ் மொழியிலே வழங்கும் பழமொழிகளுள் இதுவும் ஒன்று. இதன் கதை வேறு. இதன் கருத்து என்னவெனில் தன் பாடலுக்குக் குற்றம் சொன்ன நக்கீரருக்குத் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டி எரித்துவிடுவதாக பயமுறுத்தினபொழுது நம் ஒண்தமிழ்ப் புலவராம் நக்கீரர் உபயோகித்த பதங்களே இவை.

இன்று இவ்வுண்மை விளங்க நாம் ஓர் கதையைப் பார்ப்போம். முன் ஒரு காலத்தில் ஓர் வனத்தில் பல மிருகங்கள் வாழ்ந்துவந்தன. அவற்றிற்கெல்லாம் அரசன் யார் தெரியுமா?

சிங்க ராஜன் தன் குடி மிருகங்களையெல்லாம் தன் சொந்தப் பிள்ளைகளைப்போல் பாதுகாக்கவில்லை. இது எப்படி சிங்க ராஜனால் முடியுமா? சிங்கத்திற்குத்தான் தினம் ஓர் விலங்கு இரையாகவேண்டுமே. இவ்வாறு இருக்கும் காலை ஓர் நாள் சிங்கம் தன் ஆட்சிக்குட்பட்ட காடுகளை ஓர் சுற்று சுற்றிவிட்டு வந்தது. அச்சமயம் அது ஓர் அபூர்வ வஸ்துவை வழியில் கண்டது. உடனே அதைத் தன்னுடையது ஆக்கிக்கொள்ள எண்ணம் கொண்டது. அப்படியே செய்தும் விட்டது. அந்த வஸ்து வேறு ஏதும் இல்லை. அவ்வனத்தில் வசித்து வந்த ஓர் ஏழை மானின் ஒரு வயதுள்ள குழந்தையே.

இதைக்கண்டது மான். அதன் அடிவயிறு பகீரென்றது. தன் கண்மணி குழந்தை போய்விட்டதேயென்று ஏங்கிற்று. அது எவ்வளவு உயர்ந்த நிலையில் இருப்பதாயிருந்தாலும் தாய்க்குத் தன் பிள்ளை தனதருகில் இருக்கத்தான் ஆசையாயிருக்கும். தன் பிள்ளையைத் தனக்குக் கொடுக்கும்படி மான் சிங்க ராஜனை வேண்டிற்று. ஆனால் சிங்கமோவென்றால் அக்குழந்தைத் தன்னுடையது என்று சாதித்து விட்டது.

இத்தர்ம சங்கடத்திற்கு என்ன செய்வது? "வேலியே பயிரை மேய்ந்தால் பயிர் என்ன செய்யும்?" மான் இதர மிருகங்களிடம் தன் குறையைக் கூறிற்று. யாது பயன்? எல்லா மிருகங்கட்கும் தெரியும் சிங்கம் செய்தது அடாதது என்று. என்றாலும் என்ன? அது அரசன் அல்லவா? அரசன் ஆணைக்கு மறுப்பு ஏது?

அக்காலை அதே வனத்தில் ஓர் சிறு முயல் வசித்து வந்தது. அது 'படே' முயல். யாராயிருப்பினும் அது ஓர் ஆட்டு ஆட்டிவைத்து விடும். இது மானுக்கும் தெரியும். ஏன் சிங்கத்துக்குக்கூட அம் முயல் என்றால் சிறிது அச்சம்தான்.

முயல் மானைத் தேற்றிக்கொண்டிருந்தது. 'சரி அண்ணே! நீ சென்று ஒவ்வொரு மிருகத்தினிடமும் நாளை பகல் 12 மணிக்கு நம்

அரண்மனைக்கெதிரில் உள்ள மைதானத்தில் கூட்டம் நடைபெறும் என்று கூறிவிட்டு வா" வென்றது. அவ்விதமே மானும் செய்தது.

இடையில் முயல் வாளாயில்லை. தன் வளையைத் தோண்டிக் கொண்டே ஓர் புதரிடையில் வாயிலை ஏற்படுத்திக்கொண்டது. அது தான் முயலின் புழக்கடைவாசல், உங்களுக்குத் தெரியுமல்லவா முயலின் வளைக்குப் பல வாயில்கள் உண்டென்று.

மறுநாள் மணி 12. மிருகங்கள் எல்லாம் குறித்த இடத்தில் கூடின, பேசின. இறுதியாய் கஜேந்திரன் எழுந்து "மகா ஜனங்களே! நமது தர்ம ராஜாமீது அனியாய வழக்குக் கொண்டுவந்த மான், இன்னும் ஓர் வாரத்திற்குள் நம்மிருகேந்திரனிடம் மன்னிப்புக் கோரவில்லையானால் அத்துஷ்ட மானைத் தூக்கிலிடுவது என்று இம் மகாசபை தீர்மானிக்கிறது" என்று கூறிற்று.

மறுகணமே முயல் தன் சத்துவமெல்லாம் கூட்டி. "அநியாயம், அநியாயம் மானின்குட்டியைத் திருடினது சிங்கம்தான். **சிங்கராஜன் செய்யினும் திருட்டு திருட்டே**" என்று கத்திவிட்டு தன் வளையினுள் சென்றுவிட்டது. அடுத்த வினாடி அது தன் புழக்கடைவாயில் வழியாகத் தப்பிச் சென்றது.

எல்லா மிருகங்களும் குபீரென்று எழுந்தன. சிங்கம் முயலின் வாயிலை அடைந்தது. அது வந்ததைப் பார்த்தால் முயல் அகப்படின் 'சட்னி' ஆகியிருக்கும் என்று தோன்றிற்று. அதன் கண்களில் அவ்வளவு கோபாக்கினி தென்பட்டது. வாயிலைக் காத்தது சிங்கம், எவ்வளவு நேரம்? ஒரு நாளா? இருநாட்களா? சாகின்றவரையில், ஏன்? இரைதேடச் செல்லவில்லை? இரைதேடச் சென்றுவிட்டால் முயல் தப்பித்துச் சென்றுவிடும் அல்லவா? அந்த ஆணவ முயல் வளையினுள்ளேயே அன்ன ஆகாரமின்றி சாகட்டும் என்பதுதான் மகா புத்திசாலியான சிங்கராஜாவின் எண்ணம், என்ன அருமையான எண்ணம் பார்த்தீர்களா? சிங்கம் முயல் வளையின் வாசலிலேயே காவல் இருந்து இறந்தது.

இடையில் மான் தன் குழந்தையைக் கூட்டிக்கொண்டுபோய் சுகமாய் வேறோர் காட்டில் வாழ்ந்து வந்தது, முயலும் எதிர்பாராத விதமாக மானுடன் சேர்ந்துகொண்டது. சமயம் நேரும்போதெல்லாம் மான் முயலின் சாமர்த்தியத்தை மெச்சிப் பேசும்.

மாணவர்களே! முயலின் தந்திரத்தை நீங்கள் மெச்சுகிறீர்கள் அல்லவா? ஆனால் ஒன்று. முயல் செய்ததைப்போல் நீங்களும் செய்வீர்களா? யார் செய்யினும் குற்றம் குற்றமே என்று கூற உங்களுக்கு தைரியம் வருமா? அத்தைரியம் வரும் நாளே நம் நாடு ஏறும் நாள்.

பெண்ணின் விவேகம்

[சரித்திர சம்பந்தப்பட்டது.]

(T. Savarirajan)

அக்பர் சக்கிரவர்த்தியைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் இருத்தல் முடியாது. அவருடைய அரண்மனையில் பீர்பால் என்ற விதூஷகன் ஒருவன் இருந்தான். சமயசந்தர்ப்பத்திற்கு ஏற்ப விகடமாய்ப் பேசி மன்னனை மகிழ்விப்பதுடன், புத்தியையும், நீதியையும் புகட்டும் வழியில் நடந்துவந்தான். எனவே, அரசன் இவன்மேல் தலையாய நேசம்பூண்டு ஆதரித்துவந்தார். ஓர் நாள் அரசன் பீர்பாலுடன் சம்பாஷித்து இருந்தவாறே, "பீர்பால், நீ புத்திசாலி. விவேகம் உள்ளவன். உனக்குத் தெரியாத விஷயமும், உன்னால் செய்யமுடியாத காரியமும், ஒன்றுமில்லை. ஆதலால் கூடியசீக்கிரத்தில் நீ எனக்கு எருதுவின் பால் கொண்டுவந்து கொடுக்கவேண்டும்" என்றார்.

பீர்பால் மெய்சோர்ந்தான். பசுமாடே அன்றி காளைமாடு எவ்விதம் பால் தரக்கூடுமென்று பலகாலும் யோசித்தான். இவ்விஷயம் முற்றிலும் விநோதமாய் விகடகவிக்குத் தோன்றியது. உலகத்தில் மனிதனால் ஆகாதகாரியம் ஒன்றுமில்லை என்று அவனுக்குத் தெரியாதுபோய்விட்டது. எப்படியும் அரசன் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும். தட்டவும் கூடாது. எதிர்வாதம் புரிதலும் கூடாது. மௌனமாய் வீடுபோய்ச் சேர்ந்தான்.

அரசன் சொன்ன காரியத்தை நிறைவேற்றாவிடில் தன் உத்தியோகம் போய்விடுமென்று அஞ்சினான். இந்நாள்வரை அரசன் சொன்ன அனைத்தையும் செய்து, இக்காரியத்தில் சித்திபெறாவிடில் தன்னையொத்த கவிக் களஞ்சியங்கள் ஏளனம் செய்வார்களே என்று உள்ளம் வருந்தினான். வேறு வேலை எதையும் செய்ய ஆற்றல் இல்லாததைக் குறித்தும் பதறினான். தன் குறையை யாரிடமும் சொல்லாமல் மனதிலேயே நினைத்து நினைத்து உருகினான். அன்று முழுவதும் உணவுகொண்டிலன்; தூங்கிலன்; படுக்கையிலேயே அழுது புரண்டு கண்ணீர் வடித்தான். என்னாளும் கொஞ்சும் வதனத்துடன் இருக்கும் பீர்பால் அன்று படும் வருத்தத்தைக் காண அவன் மனைவியால் தாளமுடியவில்லை. அவள் ஒரு பெரிய படிப்பாளி. பண்டிதரின் மகள். கல்விக்கேள்விகளில் கெட்டிக்காரி. தன் கணவனின் இடுக்கணைப் போக்க பலவாறு முயற்சி செய்து, கடைசியாக அவன் இவ்விதம் உறங்காமல் வேதனைப்படக் காரணத்தைச் சொல்ல வேண்டுமென்று கெஞ்சி மன்றாடினாள். பீர்பாலும் தன் மனைவியினிடம் நம்பிக்கை உள்ளவன். தன் குறையை நீக்க அவளால் முடியுமென்று கருதினான். அரசனின் கட்டளையை வெளியிட்டான்.

அரசன் எருதின் பால் கேட்டான் என்றும் அதைப் பீர்பால் அடைந்து கொடுக்கமுடியாததினால் வருந்துகிறார் என்றும் அறிந்து,

புன்னகையுடன், "நாதா! நீங்கள் எதற்கும் கவலைப்படவேண்டிய தில்லை. அரசனுடையக் கட்டளையும் அவ்வளவு பெரிய காரியமு மில்லை. ஆனல் நீங்கள் தயவுசெய்து இன்றிலிருந்து ஏழு நாள்வரை யிலும் வெளியே செல்லுதல் கூடாது. இதற்கு நீங்கள் உடன்பட் டால், நான் நீங்கள் கேட்டதைக் கொண்டுவந்து தருவேன்" என்ருள்.

பீர்பாலும் சம்மதித்து வீட்டிலேயே இருந்துவிட்டான். வெளியே தலைகாட்டவில்லை. நாட்களும் ஒன்றின்பின் ஒன்ருய்க் கழிந்தன. அவன் பாரியாளும் எருதுவின் பால் கொண்டுவர யாதொரு பிரயத்தனமும் செய்ததாகத் தோன்றவில்லை. சில சம யங்களில் அவள்மேல் கோபம் கொண்டாலும், மனைவியின்பேரிலுள்ள வாஞ்சையாலும், அவள் வார்த்தையில் வைத்த நம்பிக்கையாலும் மௌனமாய் இருந்தான்.

ஏழாம் நாள் அதிகாலையில் பீர்பாலின் மனைவி நித்திரையிலிருந்து எழுந்தாள். உயர்ந்த ஆடை ஆபரணங்களால் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். அழுக்கு, மலம், தூசு கலந்த துர்நாற்றம் வீசும் ஒரு துணி மூட்டையுடன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு, அரண்மனையின் எதிரே உள்ள தடாகத்திற்குச் சென்று துணிகளைக் கசக்க ஆரம்பித்து விட்டாள். எங்குமில்லாத துர்க்கந்தம் வீசத் துடங்கிவிட்டது. அரண் மனைத்தடாகத்தில் யாரும் இறங்கவே கூடாது. அதிலும் கந்தல் களைக் கசக்குவதைக் காண யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள்! பெண்ணே அழகாய் இருக்கிருள். ஆடை ஆபரணங்களைப் பார்க்க பெரிய உத்தியோகஸ்தன் வீட்டுப் பெண்ணைப்போல் காணப்படுகிருள். முகத்தோற்றமோ படிப்பாளியைப்போல் இருக்கிறது. எனினும் பொது ஸ்தலத்தை அசுத்தப்படுத்துகிருள். இவ்விஷயம் கொஞ்சம் கொஞ்சமாய் பரவி அக்பர் அரசன் காதிலும் பட்டுவிட்டது.

சக்கரவர்த்தி தடாகத்தண்டை வந்தார்; கைகளில் துணிகளுடன் நிற்கும் மாதைப்பார்த்து, "பெண்ணே! உன் முகத்தோற்றம் நீ அறிவாளி என்று குறிப்பிட்டாலும், பொது ஸ்தலமாகிய இத்தடா கத்தை அசுத்தப்படுத்த உன் மனம் எப்படித் துணிந்தது, சொல்" என்ருர்.

பீர்பாலின் மனைவி சிறிதும் தயங்கினவள் அல்லள். அரசனை நிமிர்ந்து பார்த்தாள். வெட்கத்தால் தலைகுனிந்தவளைப்போல் பாவித்தாள். தலை குனிந்தவாறே,

"பாவம், கஷ்டகாலம் யாரைவிட்டது. நாங்கள் வறுமையால் மெலிய எங்களை அண்டியிருந்த வேலையாட்களும் ஓடிமறைந்தனர். என் கணவனே ஒரு வாரமாய் படுத்தபடுக்கையாய் இருக்கிருர். சிறிது நேரத்திற்கு முன்புதான் ஓர் ஆண்மகவைப் பெற்ருர். அத்துணிக ளைத்தான் நான் இங்கு கசக்குகிறேன்" என்ருள்.

பீர்பாலின் மனைவியின் வார்த்தைகள் அக்பர் சக்கிரவர்த்தியைத் தூக்கி வாரிப்போட்டது. "அல்லா! எங்களைக் காப்பாற்றும்! ஓ அல்லா! எங்களைக் காத்தருளும். பூலோகத்திற்கு என்னவோ ஆபத்து நேரிடப்போகிறது! ஆண் மகனுவது குழந்தை பெறுவதாவது! இது இயற்கைக்கு விரோதமல்லவா? ஓ, அல்லா மெய்யாகவே எங்களைக் காத்தருளும்" என்று கதறினுர்.

பீர்பாலின் மனைவி அரசனை நிமிர்ந்துபார்த்து, "ஓ! ராஜனே! இதில் யாதொரு ஆச்சரியமும் இல்லையே! உலகில் நடக்கவேண்டியது நடந்தேதீரும். என் கணவன் மகவை ஈன்றது அதிசயத்திலும் அதிசயமே! ஆனுல் ஒரு மன்னுதிமன்னன், எருதின் பாலுக்கு விருப்பம்கொண்டு கேட்டது இதைவிட விந்தையாய் இருக்கின்றதே. உண்மையிலேயே உலகத்தில் ஏதோ ஆபத்து நெருங்கித்தான் இருக்கிறது" என்ருள்.

அரசன் திகைத்துவிட்டான். அப்பொழுதுதான் தான் பீர்பாவிடம் எருதின் பால் கேட்ட விஷயம் நினைவிற்கு வந்தது. தான் சிறிதும் முன்யோசியாமல் செய்த காரியத்திற்காக வருத்தம்கொண்டான்.

"ஆம், உண்மையைக்கண்டேன். நீ பீர்பாலின் மனைவி. அவனைப்போல் நீயும் விவேகம் உள்ளவள். உன் கணவனின் புத்தி சாதுர்யம் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே இருக்கிறது. அல்லா, அவனைக் காத்து இரட்சிப்பாராக" என்ருர்.

பீர்பால் மனைவியின் புத்தி சாதுர்யத்திற்கும் விவேகத்திற்கும் மெச்சிய அக்பர் பல வெகுமதிகளை அவளுக்குக் கொடுத்தார். பீர்பாலைமென்மேலும் அதிகமதிகமாய் நேசித்தார். பெண்ணின் விவேகம் எத்தன்மையானதென்பதைப் பாருங்கள்!

யோசனைக்கணக்கு விடை

(கொத்து 33, மலர் 10, 11; பக்கம் 211)

விடை:—**296** கற்கள்: இவ்விடையளித்தவர்கள்:—

(1) A. சவரிமுத்து H. M. திருப்பயர் போர்டு பாடசாலை (2) Mudiappan, Teacher R. C. St. Mary's El. School, Cantt. Trichy. (3) S. Arpudasamy, Teacher R. C. Sempet. (4) M. L. Nathan, Vellavalanur. (5) V. Rajagopal, Nannimangalam. (6) S. Stanislaus, Purathakudi. (7) S. Antonisamy, Kovandakurichi. 8. A. Jesudas.

பெற்ருேர் சங்கங்கள்

23-3-43-ல் திண்டுக்கல் தாலூகா பூத்தம்பட்டி R. C. ஸ்கூல் பெற்ருேர் சங்க விழா திரு. P. லூர்துஸ்வாமி பிள்ளை கி. மு. அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. திரு. P. யாகப்பன், திரு. S. அந்தோனிசாமி, திரு. P. சுப்பையா முதலியவர்கள் கல்வியின் அவசியத்தைப்பற்றி சொற்பொழிவுகளாற்றினர். தலைவர்க்கு வந்தனங்கள் கூறியதுடன் விழா முடிவுற்றது.

A. Savarimuthu, Secretary.

13-4-43-ல் லால்குடி தாலூகா நெய்க்குப்பை லேபர் பாடசாலை பெற்ருேர் சங்கம், இன்ஸ்பெக்டர் ஸ்ரீ M. R. பாலகணபதி, B.A., L.T. அவர்கள் அக்கிராஸனம் வகிக்க இனிது நடைபெறலாயிற்று. அவ்வமயம் யுத்தப்பிரசாரகர் ஸ்ரீ R. ஸ்ரீனிவாஸன் அவர்கள் பெற்ருேர்களின் கடமைகளைப்பற்றி உபந்நியாசம் புரிந்தனர். தலைவரது பேருரை நிகழ்ந்தபின்னர் வந்தனேபசாரங்கள் கூறப்பட்டன,

A. Rajoo, H. M.

14-4-43-ல் லால்குடி தாலூகா கன்னுகுடி லேபர் பாடசாலை பெற்ருேர் சங்க விழா ஷை ரேஞ்சு இன்ஸ்பெக்டர் ஸ்ரீ M. R. பாலகணபதி அவர்களின் தலைமையின்கீழ் வெகு உற்சாகத்துடன் நடைபெறலாயிற்று. ஷை பாடசாலைச் சிறுவர்களும் சிறுமிகளும் சம்பாஷணைகள், சிறு நாடகங்கள் முதலிய ஆடல்பாடல்களால் அனைவரையும் மகிழ்வித்தனர். ஷை கிராமத்து பிரமுகர்கள் சொற்பொழிவுகளைச் சமயோசிதமாய் நிகழ்த்த, வந்தனேபசாரங்களுடன் விழா இனிது நிறைவெய்தியது.

S. Arokiasamy, Teacher.

17-4-43-ல் முசிறி தாலூகா அரியனூம்பேட்டை லேபர் பாடசாலையின், புதுக் கட்டிடத் திறப்பு விழாவும், பெற்ருேர் சங்கமும் உயர் திரு. S. வீராஸாமி பத்தர், M.A., L.T. (Personal Asst. to the D. E. O., Trichy.) அவர்களது தலைமையின்கீழ் கொண்டாடப்பட்டன. சங்கக் காரியதரிசி திரு. R. வேதமுத்து அவர்கள் அனைவரையும் வரவேற்று, சங்கத்தின் வருடாந்திர ரிப்போர்ட் வாசித்தபின், மாணவர்கள் பற்பல ஆடல்பாடல்களால் எல்லோரையும் ஆனந்திக்கச் செய்தனர். உயர் திரு. T. சிதம்பரம் பிள்ளை, B.A. அவர்கள் பெற்ருேர் சங்கத்தை நடத்தித் தகுதியுள்ள மாணவர்கட்குப் பரிசுகள் அளித்தனர். தலைவர்கட்கு நன்றி கூறப்பட்டதுடன் ஷை வைபவங்கள் அழகாய் முடிந்தன.

R. வேதமுத்து, H.M.

18-4-43-ல் உடையார்பாளையம் தாலூகா கொல்லாபுரம் லேபர் பாடசாலை பெற்ருேர் சங்கம் திரு. சே. அருணசலம் அவர்களது தலைமையின்கீழ் வெகு குதூகலத்துடன் நடைபெற்றது. சிறுவர்களும் சிறுமிகளும் ஆடிப்பாடி அனைவரையும் அகமகிழ்வித்தனர். தலைவர்க்கு நன்றி கூறப்பட்டது. ராஜவாழ்த்துடன் கூட்டம் கலைந்தது.

V. Pichaimuthu, Secretary.

21-4-43-ல் திருச்சி தாலூகா பேரூர் லேபர் பாடசாலை பெற்ரோர் சங்கக் கூட்டம் திரு. P. K. மருதமுத்து, கி. மு. அவர்களது தலைமையின்கீழ், சிறுவர் சிறுமிகள் ஆடிப்பாடவும் ஆசிரியர்கள் சொற்பொழிவுகள் நிகழ்த்தவும், வெகு உற்சாகத்துடன் நடைபெற்றது. A. Jesudas, Secretary.

24-4-43-ல் சாத்தூர் ரேஞ்சு உப்பத்தூர் ஸரஸ்வதி வித்தியா சாலையின் வெள்ளி விழா வைபவமும், பெற்ரோர் சங்கமும் ஷை ரேஞ்சு இன்ஸ்பெக்டர் ஸ்ரீ மகாலிங்கம் அவர்களது தலைமையின்கீழ் வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் ஷை பாடசாலை ஸ்தாபகர் ஸ்ரீ S. ஆதிநாராயணய்யர் அவர்களது உருவப்படம் ஸ்ரீ நவநீதகிருஷ்ணய்யர் B.A., L.T. அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. அன்னவரது அரிய சேவைகளைப்பற்றிப் பல பிரபலஸ்தர்கள் பிரஸ்தாபித்தனர். வந்தனோபசாரங்களுடன் விழா இனிது நிறைவேறியது.

V. Gopala Aiyar, Secretary.

25-4-43-ல் கொளப்பலூர் St. Mary's H. E. School, பெ. சங்கம் இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. E. T. பசுபதி பிள்ளை B.A., L.T. அவர்களது தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம் சுகாதார வாரக்கொண்டாட்டம், விவசாயப் பொருட்காட்சி, "நாடகம்" (வெனீஸ் வியாபாரி) முதலியனவும் நிகழ்ந்தன. மானேஜர் சங். J. S. அருள்சாமி B.A., L.T. அவர்கள் பாடசாலையின் வருடாந்திர ரிப்போர்ட்டு வாசித்தளித்தனர். வெகு குதூகலத்துடன் ஷை வைபவங்கள் இனிது முடிவெய்தின.

G. V. Natarajan, Secretary.

1-5-43, 2-5-43. இவ்விரண்டு தினங்களில் பழமார்நேரி பஞ்சாயித்துபோர்டு பாடசாலையின், மாணவ மாணவிகள் சங்க "ஆண்டு விழாவும்," பெற்ரோர் சங்க விழாவும் வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டன. பேராசிரியர் ஸ்ரீ N. கல்யாணராமய்யர் B. A., L. T. அவர்கள் மாணவர் சங்க விழாவைக் கொண்டாடத் தலைமை வகித்தனர். இன்ஸ்பெக்டர் ஸ்ரீ T. V. வெங்கட்டராமய்யர் B. A., L. T. அவர்கள் பெ. சங்கத்தை நடத்திவைத்தனர். மாணவர்கள் நடத்திக்காட்டின சம்பாஷணை, நாடகம், ஆடல்பாடல்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியளித்தன. தலைவர்கள் புரிந்த பேருரைகள் சிறப்புற்று விளங்கின. வந்தனோபசாரங்களுடன் ஷை வைபவங்கள் இனிது நிறைவேறின. அவ்வமயம் திருவிசநல்லூர் பிரபல விகட வித்துவான் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரியவர்களது "விகடம்" குழுமியுள்ள மாபெருங் கூட்டத்தினரால் பெரிதும் போற்றப்பட்டது இங்கு குறிப்பிடத்தகும்.

A. S. Kasthuri Rengan H. M. & Secretary.

6-5-43-ல் நீடாமங்கலம் "லக்ஷ்மி விலாஸ்" உயர்தரப் பாடசாலையின் 24-வது ஆண்டு விழா, டெப்யூடி தாசீல்தார் திரு. S. ராமச்சந்திர நாயுடு B. A. அவர்களது தலைமையின்கீழ் வெகு விமரிசையுடன் நடைபெற்றது. பெற்றோரும், ஏனையோரும் ஏராளமாய்க் குழுமியிருந்தனர். மாணவர்களது ஆடல் பாடல், நாடகங்கள் முதலியன சிறந்து விளங்கின. தலைவர்க்கு நன்றி கூறப்பட்டதுடன் விழா முடிந்தது.

R. Somasundaram, H. M.

7-5-43-ல் செங்காட்டூர் (செய்யூர்) St. Mary's H. El. School பெற்றோர் சங்கத்திறப்பு விழா இன்ஸ்பெக்டர் ஸ்ரீ S. சுப்பிரமணிய சாஸ்திரியார் B.A., L. T. அவர்களது தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம் மானேஜர் சங். R. சவரிநாதர் ஸ்வாமியார். பெற்றோர் கடமைகளைப்பற்றிப் பேருரை நிகழ்த்தினர். தலைவர்க்கு வந்தனங்கள் கூறப்பட்டன.

G. J. Joseph, Teacher.

24-5-43-ல் அம்பாசமுத்திரம் குத்தப்பாஞ்சான் R. C. பாடசாலையின் பெ. சங்கக்கூட்டம். ஸ்ரீ G. சவரிமுத்து பிள்ளையவர்களின் தலைமையின்கீழ் கூடியது. அவ்வமயம் ஸ்ரீ மரிய இருதயம் பிள்ளை ஷை சங்கத்தின் நலனைப்பற்றிப் பேசினர். தலைவர் முதலியவர்களுக்கு நன்றி கூறியதுடன் கூட்டம்கலைந்தது.

G. S. Maria Adaikalam, Secretary.

25-5-43-ல் சிவகங்கை இடைக்காட்டூர் R. C. ஆண் பாடசாலையின், பெ. சங்கக்கூட்டம் நடைபெறலாயிற்று. தலைமை வகித்த திரு. P. R. மாணிக்கம் பிள்ளையவர்கள் "கிராமக் கல்வியைப்பற்றி" சொற்பொழிவு நிகழ்த்தினர். வந்தன உபசாரங்களுடன் கூட்டம் கலைந்தது.

I. Susai Pragasam.

189987

விடுகவி விடைகள்

(கொத்து 33, மலர் 10, 11 ; பக்கம் 218)

விடைகள் : (1) உதடுகள். (2) பேன். (3) தண்ணீர்.

விடையளித்தவர்கள் :—S. Arpudasamy, Sempet. (4) M. L. Nathan. (5) V. Rajagopal. (6) L. Antonisamy, Purathakudi. (7) S. V. Kaliaperumal, Maharajapuram. (8) N. Mudiappan, St. Mary's Cantt. Trichy. (9) A. Jesudas, Perur.

பிரார்த்தனை

(B. Thomas Victor, R. C. T. S., Trichy.)

8, தோடி — வேதநாயகம்பிள்ளை

ஸரிகமபதநிஸ் — ரூபகதாளம் — ஸ்நிதபமகரிஸ

பல்லவி

ஸ ரி	க ரி	ஸா ‖	ஸா	த நி	ஸா ‖
தயை	புரி	ய ‖	தா	ம்த	மேன் ‖
ஸ ரி	ப	பமகரிஸா ‖	ஸா	த நி	ஸா ‖
தயை	பு	ரி . . . ய ‖	தா	ம்த	மேன் ‖

அனுபல்லவி

ப த	நி த	ப ம ‖	ப த	நி ஸ்	ஸ் ஸ் ‖
பய	நிவா	ரண ‖	பா	க்யபூ	ரண ‖
ப த	நி	நிஸ்நிதபம ‖		,,	‖
பய	நி	வா . ர . . ண ‖		,,	‖
தாக்ரி	ஸ்ாதநி	ஸ் ஸ் ‖	ஸ்நிதா	பாபம	கரிஸா ‖
உய .	ருமா .	ரண ‖	உ . ல .	ககா .	ர . ண ‖

(தயை)

சரணங்கள்

ப ப	பாமப	மகமா ‖	ப த	நி த	ப ம ‖
அத்த	னேஒ	. . . ரு ‖	ஜாண	கிய	குச்சிக் ‖
ப த	நி ஸ்	ஸ் ஸ் ‖	ஸ் ரி	நி ஸ்	ஸ்ா ‖
காக	நானு	றெல்லாம் ‖	அலைந்	திடும்	பக்ஷி ‖
த த	த க்	ரி ஸ் ‖	ஸ் ஸ்	ஸ்ாதநி	ஸ் ஸ் ‖
நித்தம்	பேசு	வேன் ‖	ஆயி	ரம்க .	. க்ஷி ‖
ஸ் ஸ்	ஸ்ாதநி	த ப ‖	க ம	ப ம க	ரி ஸ ‖
நீதி	நெறியில்	நான் ‖	நிர	க்ஷர .	குக்ஷி ‖

(தயை)

2. சர்வ விநோத விசித்திர நிர்மாண
ஸாஸ்வத மங்கள சுத்தகல்யாண
பரம நித்யானந்த பாக்ய உக்ராண
பால வேத நாயகன் ப்ரமாண.

குறிப்பு:—ஷட்ஜம, பஞ்சமத்தைத்தவிர இந்த ராகத்தில்வரும் ஸ்வரங்கள் சு[illegible] சாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், சுத்ததைவதம், கைசிக நிஷா[illegible]

Reg. No. M. 1534

OUR EMPLOYMENT BUREAU

1. WANTED immediately 2 Secondary Grade Trained Masters and one Tamil Pandit for R. C. Boys' Higher Ely. School, Purathakudy.

2. WANTED one Secondary Grade Trained Mistress to be the Head Mistress of the R. C. Girls School, Purathakudy.

For full particulars regarding 1. and 2. apply to:—

Very Rev. Fr. J. ADIROUBAM,
Manager and Correspondent,
R. C. Boys' and Girls' School,
Purathakudy, Irungalur P.O.
Trichy Dt.

3. WANTED a Secondary Grade Trained Master or Mistress for St. Joseph's Boys' Ely. School, Manaparai, on Rs. 21 + Rs. 4 war allowance, per mensem.

Apply to the Manager, R. C. Boys' School,
Manaparai, Trichy Dt.

4. WANTED 2 Secondary Grade and 2 Higher Ely. Trained Teachers. Mistresses may also apply. Pay Rs. 25—½—45, and Rs. 13—½—30.

Apply to the Manager,
Nammalwar Higher Ely. School,
Namakkal, Salem Dt.

5. WANTED one Secondary Grade Trained Teacher. Salary Rs. 25 per mensem.

Apply to the Manager,
R. C. Boys' School,
Anantharayankottai,
(Via) Dindigul.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.